மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள 383 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 188 ஆரம்ப சுகாதார நிலையங்களில் துணை செவிலியர் உள்பட அனைவருக்கும் குடியிருக்க வீடு கட்டப்பட்டுள்ளது. பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், 75 ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டவும், 24 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகம் மற்றும் குடியிருப்பு இல்லங்கள் கட்ட செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கிறது. மொத்தமாகக் குறிப்பு வந்திருக்கிறது. தனித்தனியாகக் குறிப்பு அனுப்ப வேண்டுமென்று பொதுப் பணித்துறை கேட்கப்பட்டிருப்பதால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்.

*வின எண். 204—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்களில் கீரல் ஏற்பட்டு, இடிந்து விழும் நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது ஆரம்ப சுகாதார மருத்துவமனை 1—12—1977 முதல் வாடகைக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு அங்கு இயங்கி வருகிறது. பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான புதிய இடத்தை தேர்ந்தெடுக்கும்படி திருநெல்வேலி மாவட்ட நல்வாழ்வு அலுவலரை கேட்டு இருக்கிறார். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது அந்த மருத்துவமனை வாடகை இல்லத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, புளியம்பட்டி என்ற முனிசிபாலிட்டி இருக்கிறது. அங்கு படுக்கை வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி இல்லை. மிகப் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. வாசுதேவநல்லூரில் உள்ள

பிரைமரி ஹெல்த் சென்டரும் இடிந்து விட்டது. புதிதாக வந்திருக்கும் இடம் மிகச் சிறிய கட்டிடமாக இருப்பதால் மூன்று டாக்டர்கள்கூட இருக்க முடியாது. இந்தச் சூழ்நிலையைக் கருதி உடனடியாக புதிய கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழில் கூட்டுறவு வங்கி

*வினா எண். 205—திரு. வி. கே. கோதண்டராமன். மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) ரிசர்வ் வங்கி இதை அங்கீகரித்துள்ளதா?

(இ) இல்லை என்றால், என்ன காரணம்?

(ஈ) இதுவரை எவ்வளவு கடன் வழங்கியுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி 1961-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) ரிசர்வ் வங்கி இதனை அங்கீகரிக்கவில்லை.

(இ) ரிசர்வ் வங்கி இதனை அங்கீகரிக்க சில நிபந்தனைகளை விதித்துள்ளது. இது குறித்து ரிசர்வ் வங்கிக்கும், தமிழக அரசுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

(ஈ) 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதி வரை தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, குறுகிய மற்றும் நீண்ட கால கடன்களாக, மொத்தமாக ரூ.1,701.30 இலட்சம் வழங்கியுள்ளது.

உளுந்தூர்பேட்டையில் விமானதளம்.

*வினா எண். 206—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் உள்ள பழைய விமானதளத்தை சீர் செய்து விமான போக்குவரத்து நடத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?